**MCOP.No. 412/2024**

Date : 25.06.2026

Witness Name & Rank - செல்வன் - PW2

**சாட்சி அழைக்கப்பட்டு 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது**

1. விபத்து எத்தனை மணிக்கு நடந்தது என்றால் காலை 7.45 மணிக்கு நடந்தது. மேற்படி சாலை வளைவு சாலை என்றால் சரிதான். நான் வளைவு சாலையில் எந்தவிதமான சமிக்கையும் இல்லாமல் சாலையில் திரும்பும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்கூறிய விபத்து எனது கவனக்குறைவால் நிகழ்ந்ததுள்ளதால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வாகனம் ஓட்ட உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். பள்ளி வாகனம் மெதுவாக வந்தது என்றால் சரியல்ல. நாங்கள் தலை கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு தலை கவசம் அணிந்திருந்தால் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டிருக்காது எனவே நான் வழக்கிற்காக தலை கவசம் அணிந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர வருமானம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு கூலி வேலைக்கு அழைத்தால் தான் அன்றைய தினத்திற்கான வருமானம் என்றால் சரிதான். மருத்துவ பில்கள் இழப்பீட்டிற்காக மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது எனவே 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்கள் பூரண குணம் அடைந்துவிட்டது என்றால் சரியல்ல.

**மனுதாரர் தரப்பு மறு விசாரணை**

மேற்படி விபத்தானது காலை 7.45 மணிக்கு நடந்துள்ளது முதல் விசாரணை வாக்குமூலத்தில் தட்டச்சு பிழையால் இரவு 7.45 என்று அச்சிடப்பட்டுள்ளது.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு மறு குறுக்கு விசாரணை இல்லை.**

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/−)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---

**MCOP.No. 412/2024**

Date : 25.06.2026

Witness Name & Rank - லட்சுமி - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது**

1. எனது கணவருக்கு விபத்தானது 09.01.2024 ம் தேதி நடந்தது என்றால் சரிதான். எத்தனை மணிக்கு விபத்து நடந்தது என்றால் காலை 7.45 மணிக்கு நடந்தது. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது கணவர் வாகனத்தை ஓட்டிச்சென்றாரா இல்லை பின்னால் அமர்ந்து சென்றார். எனது கணவர் விபத்து சமயத்தில் தலை கவசம் அணிந்து செல்லவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் 09.01.2024 முதல் 25.01.2024 வரை மருத்துவமனை சிசிக்சையில் இருந்து மரணித்தார் என்றால் சரிதான். எனது கணவர் விபத்தால் மரணிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது கணவரின் மாத வருமானத்தை காட்ட எந்த விதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே எனது கணவரின் வருமானத்தை மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவர் மருத்துவ சிசிச்சையில் மருத்துவ கவனக்குறைவால் மரணம் நிகழ்ந்துள்ளது மேற்பைடி மரணத்திற்கும் விபத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.
2. **மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கையில் மரணம் தலையில் ஏற்பட்ட காயத்தினால் மரணம் நிகழ்ந்ததாக சொல்லப்பட்டுள்ளது எனவே எனது கணவர் தலை கவசம் அணிந்து செல்லவில்லை என்றால் சரியல்ல.** மேற்படி விபத்து சாலை வளைவான சாலை என்றால் சரிதான். எனது கணவரை மோதிய வாகனம் பள்ளி வாகனம் என்றால் சரிதான். பொதுவாக பள்ளி வாகனத்தில் வேக கட்டுப்பாடு கருவி இருக்கும் எனவே எனது கணவர் சென்ற வாகனத்தின் கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. எனவே மேற்படி விபத்திற்கும் 1 ம் எதிர்மனுதாரருக்கும் தொடர்பு இல்லை எனது கணவர் சென்ற வாகனத்தின் ஓட்டுநர் செல்வம் தான் உரிய தரப்பினராக சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் எனவே 3 வது எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. மருத்துவ பில்கள் மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. **மனுதாரர் தரப்பு மறு விசாரணை**
3. மேற்படி விபத்தானது காலை 7.45 மணிக்கு நடந்துள்ளது முதல் விசாரணை வாக்குமூலத்தில் தட்டச்சு பிழையால் இரவு 7.45 என்று அச்சிடப்பட்டுள்ளது.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பு மறு குறுக்கு விசாரணை இல்லை.**

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.